# DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | |
|---|---|
| Miscellaneous case No: | : S.C. No. 323/ 2012 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 8 |
| Name | : கண்ணன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.08.2024.

--------

எதிரி ஆஜர்

**முதல் விசாரணை:**

நான் கருகட்டான்பட்டியில் குடியிருந்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது அல்ல. அந்த நேரத்தில் நான் வெளியூரில் இருந்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசுத்தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி எனது அக்கா மகளை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எனக்கு தம்பி உறவுமுறை என்பதால் போலீசார் விசாரணையில் 29.07.2011ம் தேதி மதியம் 2.00 மணிக்கு நானும், சீமைச்சாமியும் அய்யணார் கோயிலில் நின்றுகொண்டிருந்தோம். அப்போது ஆனந்தராஜா நின்றுகொண்டிருந்தார். அவர் வந்த மோட்டார் சைக்கிள் TN 58 U 4773 என்ற வாகனத்தை நிறுத்தி

போலீசார் மதியம் 2.15 மணியளவில் அவரை கைது செய்து ஒரு ஒப்புதல் வாக்கு மூலம் எங்கள் முன்பு வாங்கினார்கள். பின்னர் மோட்டார் சைக்கிளையும், ரத்தம் படிந்த கலர் பேன்ட், சட்டை, அருவாள் ஆகியவற்றை கைப்பற்றி அத்தாட்சியில் எங்களிடம் கையெழுத்து வாங்கினார்கள் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு எதிரி எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறு விசாரணை :** இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல எதிரி/கள் முன்னிலையில் என்னால் தட்டச்சுருக்குச் சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2024.12.19 15:09:52 +0530

உதவி அமர்வு நீதிபதி,
உசிலம்பட்டி.